பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 08 2024 — 7 15
புதன்கிழமை — காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது ஃபிஜி பயணத்தை முடித்துக் கொண்டு நியுசிலாந்து புறப்பட்டுச் சென்றார்.
2. தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
3. விவசாயிகளுக்கு குறுகியகால கடனாக அதிகபட்சம் மூன்று லட்சம் ரூபாய் ஏழு சதவீத வட்டியில் வழங்குமாறு வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.
4. பங்ளாதேஷில் இடைக்கால அரசின் தலைவராக திரு முகமது யூனூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.
5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி கொழும்புவில் இன்று நடைபெறுகிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**[]<<<>>>[]**

மூன்று நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது ஃபிஜி பயணத்தை முடித்துக் கொண்டு நியுசிலாந்து புறப்பட்டுச் சென்றார்.

இன்று நியுசிலாந்தின் ஆக்லாண்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார்.

முன்னதாக ஃபிஜி அதிபர் திரு வில்லியம் **katonivere** அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திருமதி திரௌபதி முர்மு, இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகள் 75 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும், பல்வேறு துறைகளில் இது மேலும் வலுப்பெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பத்தாவது தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கைத்தறித்துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய நெசவாளர்களுக்கு குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் விருதுகளை வழங்கி கௌரவிக்கிறார்.

கைத்தறி பாரம்பரியம் தொடர்பான புத்தகம் ஒன்றையும் அவர் வெளியிடுகிறார்.

மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

இந்தியா வந்துள்ள செயின்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் **Denzil douglas** -வுடன் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் புதுதில்லியில் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

இது குறிதது திரு ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப்பதிவில் டிஜிட்டல், சுகாதாரம், உணவு பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே உறவுகளை மேலும் விரிவுபடுத்துவது குறித்து ஆலோசனை நடத்தியதாகக் கூறியுள்ளார்.

உலக அளவில் தெற்கு நாடுகளின் முக்கியத்துவம் குறித்தும் விவாதித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே அரசியல் ஆலோசனைகளை தீவிரப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் இந்த சந்திப்பின்போது கையெழுத்திடப்பட்டதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

விவசாயிகளுக்கு குறுகியகால கடனாக அதிகபட்சம் மூன்று லட்சம் ரூபாய் ஏழு சதவீத வட்டியில் வழங்குமாறு வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.

மத்திய அரசின் திருத்தியமைக்கப்பட்ட வட்டி விகித திட்டத்தின் கீழ் குறுகிய கால கடன்கள் தொடர்பாக ரிசர்வ் வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கால்நடைகள் பராமரிப்பு, பால்வளம், மீனவளத்துறை ஆகியவற்றுக்கான கடன்களை வழங்குவதில் ஏழு சதவீத வட்டியில் விவசாயிகளுக்கு இந்த கடன்களை வழங்குமாறு ரிசர்வ் வங்கி அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு மூன்று சதவீத வட்டிச் சலுகை வழங்க வேண்டுமென்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

கேரள மாநிலம் வயநாட்டில் நேரிட்ட நிலச்சரிவு காரணமாக சாலியாறு ஆற்றின் இரு கரைகளிலும் உடல்களை தேடுதல் பணிகளை தீவிரப்படுத்த அம்மாநில அமைச்சரவைக் குழு அறிவுறுத்தியுள்ளது.

அப்பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் உடல்கள் கடலுக்கு அடித்துச் செல்லப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு கடற்படை மற்றும் கடலோரக் காவல்படையின் உதவி கோரப்பட்டிருப்பதாகவும், அமைச்சரவைக் குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு பினராயி விஜயன், பாதிக்கப்பட்ட பகுதிகளில் இடிந்த கட்டிடங்களை உரிமையாளர்களின் அனுமதி இல்லாமல் முற்றிலுமாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்நிலையில் மண்ணில் புதையுண்ட 22 உடல்கள் கண்டெடுக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

குஜராத் மாநிலத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக அங்குள்ள 45 அணைகளும் நிரம்பும் தருவாயில் உள்ளது.

மிகப்பெரிய அணையான சர்தார் சரோவர் அணையின் முழு கொள்ளளவில் 60 சதவீதம் தண்ணீர் நிரம்பி இருப்பதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதையடுத்து அணைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே அடுத்த இரண்டு நாட்களுக்கு குஜராத்தின் தென்மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

**[]<<<>>>[]**

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அமைச்சர் திரு ஜெய்சங்கரிடம் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

நேற்று புதுதில்லியில் திரு ஜெய்சங்கரை திமுக மக்களவை குழு தலைவர் திருமதி கனிமொழி தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து இந்த கோரிக்கையை வலியுறுத்தினர்.

இந்த குழுவில் இடம்பெற்ற மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு அனிதா ராதாகிருஷ்ணன் இது தொடர்பான கோரிக்கை முனு ஒன்றை திரு ஜெய்சங்கரிடம் வழங்கினார்.

இலங்கை சிறைகளில் உள்ள மீனவர்களை விடுவிப்பதுடன், அவர்கள் எதிர்கொண்டு பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மேட்டூர் அணை நிரம்பியுள்ள நிலையில், அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்படுவது எட்டு நாட்களுக்குப் பிறகு இன்று அதிகாலை ஐந்து மணி முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

காவிரியில் மேட்டூர் அணைக்கு வரும் உபரி நீரின் அளவு குறைந்ததால் மேட்டூர் அணையின் 16 கண் மதகுகள் வழியாக திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) -48--- செகண்ட்*

**[]<<<>>>[]**

பங்ளாதேஷில் இடைக்கால அரசின் தலைவராக நோபல் பரிசு பெற்ற திரு முகமது யூனூசை அந்நாட்டு அதிபர் திரு முகமது சகாபுதின் நியமித்துள்ளார்.

டாக்காவில் அதிபர் மாளிகையில் முப்படை தளபதிகள் மற்றும் மாணவர்கள் அமைப்பினருடனான ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக அதிபரின் செய்தி தொடர்பாளர் திரு ஜாய்னல் தெரிவித்துள்ளார்.

இடைக்கால அரசின் மற்ற உறுப்பினர்கள் குறித்து பின்னர் இறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக பங்ளாதேஷ் நாடாளுமன்றத்தை நேற்று அதிபர் கலைத்து உத்தரவிட்டார்.

**[]<<<>>>[]**

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் அதிகாரப்பூர்வ அதிபர் வேட்பாளராக அந்நாட்டின் துணை அதிபர் திருமதி கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

திருமதி கமலா ஹாரிஸ் பெயரை ஜனநாயகக் கட்சி நேற்று முறைப்படி அறிவித்தது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதலாவது நபராக அவர் அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறார்.

இந்நிலையில் துணை அதிபர் தோதலுக்கான வேட்பாளராக மின்ன சோட்டா மாகாண ஆளுநர் திரு **Tim walz** –ஐ திருமதி கமலா ஹாரீஸ் தேர்வு செய்து அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நேபாளத்தின் **Baglung** பகுதியில் நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது. நான்கு பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர்.

கண்டகி மாகாணத்தில் உள்ள இந்த பகுதியில் நேரிட்ட நிலச்சரிவில் வீடு ஒன்ற புதைந்ததில் இரண்டு பேரும், மற்றொரு சம்பவத்தில் ஐந்து பேரும் உயிரிழந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி கொழும்புவில் இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி பிற்பகல் மணி 2-30-க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இலங்கை ஒன்றுக்கு — பூஜ்ஜியம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.,

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் மல்யுத்த பிரிவில் இந்தியாவின் வினேஷ் போகத் இன்று இறுதி சுற்றில் பங்கேற்கிறார்.

இப்போட்டியில் 50 கிலோ எடைப்பிரிவில் அவர் பங்கேற்கிறார்.

நேற்று நடைபெற்ற ஹாக்கிப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் ஜெர்மனியிடம் இந்தியா இரண்டுக்கு - மூன்று என்ற கோல் கணக்கில் வெற்றி வாய்ப்பை இழந்தது.

***End of News***